# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 084/மா/2019
ஆணை நாள்: 03.01.2020

திருமதி. வி. கிருஷ்ணவேணி,
கோயம்புத்தூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாநகராட்சி, சின்னவேடன்பட்டி, துடியலூர் ரோடு, நவரத்னா காலனி, கதவு எண். 2, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. வி. கிருஷ்ணவேணி என்பவரது 11.05.2019 நாளிட்ட முறையீட்டு மனு 14.05.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்ததில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண். 084/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு விசாரணையின் போது அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

முறையீட்டு மனுதாரர் தனது 11.05.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில் தன்னிடமிருந்து கூடுதலாக வசூலிக்கப்பட்ட காலியிட வரித் தொகை 2012 – 2013 முதல் 2017 – 2018 வரையிலா காலத்திற்குறியதை திரும்ப வழங்கக்கோரி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு விண்ணப்பித்தும், இதுவரையில் எந்த நடவடிக்கையும் இல்லை என முறையீடு செய்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 23.05.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

இம்முறைமன்ற நடுவத்தின் 24.10.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி, 18.12.2019 அன்று முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி, சின்னவேடன்பட்டி நவரத்னா காலனியில் உள்ள தனது காலி வீட்டு மனையில் வீடுகட்டுவதற்கு சின்னவேடன்பட்டி முன்பு ஊராட்சியாக இருந்தபோது வீடு கட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதி பெற்றதாகவும், சின்னவேடன்பட்டி 2011 ஆம் ஆண்டு கோய்மபுத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு மாநகராட்சியின் ஒரு பகுதியாக உள்ளது என்றும், 2010 – ஆம் ஆண்டு, மே மாதம் சின்னவேடன்பட்டி ஊராட்சியில் கட்டிட அனுமதி பெறப்பட்டது என்றும், அந்த ஆணை ஓராண்டுக்கு மட்டும் செல்லத்தக்கது என்றும், அதற்கு பின்பு அதை புதுப்பிக்கவும் மறு அனுமதி பெறுவதற்காகவும் மாநகராட்சிக்கு தெரிவித்ததாகவும் மாநகராட்சியிடமிருந்து பதில் ஏதும் இல்லை என்றும், 2017 – ஆம் ஆண்டு மனுவில் குறிப்பிட்டிருக்கும் இடத்தில் கட்டிடம் கட்டப்பட்டது என்றும், காலிமனை வரி 2008-ஆம் ஆண்டு முதல் 2017 – ஆம் ஆண்டு வரி கட்டியுள்ளதாகவும், சொத்துவரி 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து 2017-2018 வரையில் செலுத்தியுள்ளதாகவும் சொத்துவரி செலுத்திய காலத்திற்கு காலி மனைவரி வசூலிக்கக்கூடாது என்றும், இது சம்மந்தமாக உரிய ஆணையிடுமாறு தெரிவித்தார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 24.10.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 18.12.2019 அன்று கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையர் சார்பாக உதவி வருவாய் அலுவலர் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் சின்னவேடன்பட்டி பேரூராட்சியாக இருந்த போது, வீடு கட்டுவதற்கு 2011 – ஆம் ஆண்டு கட்டிட வரைபட அனுமதி

பெற்றுள்ளார் என்றும், வரைபட அனுமதி எண். 72/11-12 நாள் 24.5.2011 ஆகும் எனவும், இக்கட்டிட வரைபட அனுமதி ஒரு ஆண்டு காலம் மட்டும் செல்லத்தக்கதாகும் என்றும் இவர் 2017 ஆம் ஆண்டு கட்டிடம் கட்டி 07.11.2017 ல் சொத்துவரி விதிக்க மாநகராட்சிக்கு மனு அளித்துள்ளார் என்றும், மாநகராட்சி அம்மனுவின் மீது நடவடிக்கை மேற்கொண்டு தரைதளத்திற்கு 1631 சதுர அடிக்கு அரையாண்டிற்கு ரூபாய். 1481/- வீதமும், அபராத கட்டணம் ரூ.250/- வீதமும், முதல் தளத்திற்கு 1631 சதுர அடிக்கு ரூ.1481/-வீதமும், அபராதக் கட்டணம் ரூ.600/- வீதமும், 01.04.2012 முதல் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்டவாறு தவறாக நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வரிவிதிப்பினை அவர் கட்டிடம் கட்டிய 2017-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் சொத்துவரி விதிப்பு தொடர்ந்து நடைமுறை படுத்துவதற்கும், முந்தைய வரிவிதிப்புகள் ரத்து செய்து திருத்திய ஆணை வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம், கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம் உதவி வருவாய் வாக்குமூலம் மற்றும் விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், முறையீட்டு மனுதாரர் வீடு கட்டுவதற்கான கட்டிட வரைபட அனுமதியினை சின்னவேடன் பட்டி பேரூராட்சியில், அது பேரூராட்சியாக இருந்த போது 2011 ஆம் ஆண்டு பெற்றுள்ளார் என்பதும் முறையீட்டு மனுதாரர் தான் அனுமதி பெற்றபடி அதில் விதிக்கப்பட்டிருந்த காலக்கெடுவான ஒரு ஆண்டுக்குள் கட்டடம் கட்டவில்லை என்பதும், 2011 ஆம் ஆண்டு, சின்னவேடன்பட்டி பேரூராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பின்பு மாநகராட்சியிடம் கட்டிட அனுமதி பெற்று கட்டிடம் கட்டியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான கட்டிட அனுமதி ஏதுமின்றி 2017 ஆம் ஆண்டு கட்டிடம் கட்டியுள்ளார் என்பதும், மாநகராட்சியால் 2008 – 2009 ஆம் ஆண்டு முதல் காலி மனை வரிவிதிப்பும், 2012 – 2013 ஆம் ஆண்டு முதல் சொத்துவரிவிதிப்பும் செய்யுதுள்ளதாக வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் வாயிலாக தெரிய வருகிறது. இந்நேர்வில் 2017 – 2018 ஆம் ஆண்டு (1.4.2017) முதல்

சொத்துவரிவிதிப்பினை தொடர்ந்து நடைமுறைபடுத்தவும், மற்றும் முந்தைய காலி மனை வரிவிதிப்பு மற்றும் சொத்து வரிவிதிப்பது தொடர்பான திருத்திய ஆணை வழங்கவும், முறையீட்டு மனுதாரர் உரிய கட்டிட அனுமதி இன்றி கட்டப்பட்டுள்ள இக்கட்டிடத்தின் மீது உரிய விதிமுறைகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைளின் விபரங்களை அறிக்கையாக இம்முறைமன்ற நடுவத்தில் 30 தினங்களில் சமர்ப்பிக்க கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டல உதவி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவிப்பதிவாளர்

பெறுநர்

1. திருமதி. வி. கிருஷ்ணவேணி,
   க/பெ. வேலுசாமி,
   கதவு எண். 2, நவரத்னா காலனி,
   துடியலூர் ரோடு,
   (சுண்ணம்புக் காளவாய் பஸ் நிறுத்தம் தெற்கு)

2. உதவி ஆணையர்,
   வடக்கு மண்டலம்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி.

3. ஆணையர்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி.
   கோயம்புத்தூர் - 641 001.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரி